ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பூதத்தாழ்வார் அருளிச்செய்த

# ॥ இரண்டாம் திருவந்தாதி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இரண்டாம் திருவந்தாதி ॥

## திருக்குருகைப் பிரான் பிள்ளான் அருளிச்செய்த தனியன்

என்பிறவி தீர இறைஞ்சினேன் இன்னமுதா⋆
அன்பே தகளி அளித்தானை⋆- நான் புகழ் சேர்
சீதத்தார் முத்துகள் சேரும் கடல் மல்லைப்⋆
பூதத்தார் பொன்னங்கழல்

‡அன்பே தகளியா⋆ ஆர்வமே நெய் ஆக⋆
இன்புருகு சிந்தை இடு திரியா⋆ நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன்⋆ நாரணற்கு⋆
ஞானத் தமிழ் புரிந்த நான் (1)

ஞானத்தால் நன்குணர்ந்து⋆ நாரணன் தன் நாமங்கள்⋆
தானத்தால் மற்றவன் பேர் சாற்றினால்⋆ வானத்-
தணி அமரர்⋆ ஆக்குவிக்கும் அஃதன்றே⋆ நங்கள்
பணி அமரர் கோமான் பரிசு (2)

பரிசு நறு மலரால்⋆ பாற்கடலான் பாதம்⋆
புரிவார் புகழ் பெறுவர் போலாம்⋆ புரிவார்கள்
தொல் அமரர் கேள்வித்⋆ துலங்கொளி சேர் தோற்றத்து⋆
நல் அமரர் கோமான் நகர் (3)

நகர் இழைத்து நித்திலத்து⋆ நாண்மலர் கொண்டு⋆ ஆங்கே
திகழும் அணி வயிரம் சேர்த்து⋆ நிகர் இல்லாப்
பைங்கமலம் ஏந்திப்⋆ பணிந்தேன் பனி மலராள்⋆
அங்கம் வலம் கொண்டான் அடி (4)

அடி மூன்றில் இவ்வுலகம்⋆ அன்றளந்தாய் போலும்⋆
அடி மூன்றிரந்தவனி கொண்டாய்⋆ படிநின்ற
நீர் ஓத மேனி⋆ நெடுமாலே⋆ நின் அடியை
யார் ஓத வல்லார் அறிந்து (5)

அறிந்தைந்தும் உள் அடக்கி⋆ ஆய் மலர் கொண்டு⋆ ஆர்வம்
    செறிந்த மனத்தராய்ச் செவ்வே⋆ அறிந்தவன் தன்
பேர் ஓதி ஏத்தும்⋆ பெருந் தவத்தோர் காண்பரே⋆
    கார் ஓத வண்ணன் கழல் (6)

கழல் எடுத்து வாய் மடித்துக்⋆ கண் சுழன்று⋆ மாற்றார்
    அழல் எடுத்த சிந்தையராய் அஞ்ச⋆ தழல் எடுத்த
போர் ஆழி ஏந்தினான்⋆ பொன் மலர்ச் சேவடியை⋆
    ஓர் ஆழி நெஞ்சே! உகந்து (7)

உகந்துன்னை வாங்கி⋆ ஒளி நிறம் கொள் கொங்கை⋆
    அகம் குளிர உண் என்றாள் ஆவி⋆ உகந்து
முலை உண்பாய் போலே⋆ முனிந்துண்டாய்⋆ நீயும்
    அலை பண்பால் ஆனமையால் அன்று (8)

அன்றது கண்டஞ்சாத⋆ ஆய்ச்சி உனக்கிரங்கி⋆
    நின்று முலை தந்த இந் நீர்மைக்கு⋆ அன்று
வரன் முறையால் நீ அளந்த⋆ மா கடல் சூழ் ஞாலம்⋆
    பெரு முறையால் எய்துமோ பேர்த்து (9)

பேர்த்தனை⋆ மா சகடம் பிள்ளையாய்⋆ மண் இரந்து
    காத்தனை⋆ பல் உயிரும் காவலனே⋆ ஏத்திய
நாவுடையேன் பூவுடையேன்⋆ நின் உள்ளி நின்றமையால்⋆
    கா அடியேன் பட்ட கடை (10)

கடை நின்றமரர் கழல் தொழுது⋆ நாளும்
    இடை நின்ற இன்பத்தர் ஆவர்⋆ புடை நின்ற
நீர் ஓத மேனி⋆ நெடுமாலே⋆ நின் அடியை
    ஆர் ஓத வல்லார் அவர் (11)

அவர் இவர் என்றில்லை⋆ அரவணையான் பாதம்⋆
    எவர் வணங்கி ஏத்தாதார் எண்ணில்⋆ பலரும்
செழும் கதிரோன் ஒண் மலரோன்⋆ கண்ணுதலோன் அன்றே⋆
    தொழும் தகையார் நாளும் தொடர்ந்து (12)

தொடர் எடுத்த மால் யானை⋆ சூழ் கயம் புக்கஞ்சிப்⋆
    படர் எடுத்த பைங்கமலம் கொண்டு⋆ அன்றிடர் அடுக்க
ஆழியான்⋆ பாதம் பணிந்தன்றே⋆ வானவர் கோன்
    பாழி தான் எய்திற்றுப் பண்டு (13)

பண்டிப் பெரும் பதியை ஆக்கி⋆ பழி பாவம்
    கொண்டிங்கு⋆ வாழ்வாரைக் கூறாதே⋆ எண் திசையும்
பேர்த்த கரம் நான்குடையான்⋆ பேர் ஓதிப் பேதைகாள்⋆
    தீர்த்தகரர் ஆமின் திரிந்து (14)

திரிந்தது வெம் சமத்துத்⋆ தேர் கடவி⋆ அன்று
    பிரிந்தது சீதையை மான் பின் போய்⋆ புரிந்ததுவும்
கண் பள்ளி கொள்ள⋆ அழகியதே⋆ நாகத்தின்
    தண் பள்ளி கொள்வான் தனக்கு (15)

தனக்கடிமை பட்டது⋆ தான் அறியானேலும்⋆
    மனத்தடைய வைப்பதாம் மாலை⋆ வனத் திடரை
ஏரியாம் வண்ணம்⋆ இயற்றும் இது வல்லால்⋆
    மாரி யார் பெய்கிற்பார் மற்று (16)

மற்றார் இயல் ஆவர்⋆ வானவர் கோன் மா மலரோன்⋆
    சுற்றும் வணங்கும் தொழிலானை⋆ ஒற்றைப்
பிறை இருந்த⋆ செஞ்சடையான் பின் சென்று⋆ மாலைக்
    குறை இரந்து தான் முடித்தான் கொண்டு (17)

கொண்டதுலகம்⋆ குறள் உருவாய்க் கோளரியாய்⋆
    ஒண் திறலோன் மார்வத்துகிர் வைத்தது⋆ உண்டதுவும்
தான் கடந்த ஏழ் உலகே⋆ தாமரைக் கண் மால் ஒருநாள்⋆
    வான் கடந்தான் செய்த வழக்கு (18)

வழக்கன்று கண்டாய்⋆ வலி சகடம் செற்றாய்⋆
    வழக்கொன்று நீ மதிக்க வேண்டா⋆ குழக் கன்று
தீ விளவின் காய்க்கெறிந்த⋆ தீமை திருமாலே⋆
    பார் விளங்கச் செய்தாய் பழி (19)

பழி பாவம் கையகற்றிப்⋆ பல் காலும் நின்னை⋆
    வழிவாழ்வார் வாழ்வராம் மாதோ⋆ வழுவின்றி
நாரணந் தன் நாமங்கள்⋆ நன்குணர்ந்து நன்கேத்தும்⋆
    காரணங்கள் தாம் உடையார் தாம் (20)

தாம் உளரே⋆ தம் உள்ளம் உள் உளதே⋆ தாமரையின்
    பூவுளதே⋆ ஏத்தும் பொழுதுண்டே⋆ வாமன்
திரு மருவு⋆ தாள் மருவு சென்னியரே⋆ செவ்வே
    அரு நரகம் சேர்வதரிது (21)

அரியதெளிதாகும்⋆ ஆற்றலால் மாற்றிப்⋆
    பெருக முயல்வாரைப் பெற்றால்⋆ கரியதோர்
வெண் கோட்டு மால் யானை⋆ வென்று முடித்தன்றே⋆
    தண் கோட்டு மா மலரால் தாழ்ந்து (22)

தாழ்ந்து வரம் கொண்டு⋆ தக்க வகைகளால்⋆
    வாழ்ந்து கழிவாரை வாழ்விக்கும்⋆ தாழ்ந்த
விளங்கனிக்குக்⋆ கன்றெறிந்து வேற்றுருவாய்⋆ ஞாலம்
    அளந்தடிக் கீழ்க் கொண்ட அவன் (23)

அவன் கண்டாய் நல் நெஞ்சே!⋆ ஆர் அருளும் கேடும்⋆
    அவன் கண்டாய் ஐம்புலனாய் நின்றான்⋆ அவன் கண்டாய்
காற்றுத்தீ நீர் வான்⋆ கரு வரை மண் கார் ஓதச்⋆
    சீற்றத் தீ ஆவானும் சென்று (24)

சென்றதிலங்கைமேல்⋆ செவ்வே தன் சீற்றத்தால்⋆
    கொன்றதிராவணனைக் கூறுங்கால்⋆ நின்றதுவும்
வேய் ஓங்கு தண் சாரல்⋆ வேங்கடமே⋆ விண்ணவர் தம்
    வாய் ஓங்கு⋆ தொல் புகழான் வந்து (25)

வந்தித்தவனை⋆ வழி நின்ற ஐம் பூதம்⋆
    ஐந்தும் அகத்தடக்கி ஆர்வமாய்⋆ உந்திப்
படி அமரர் வேலையான்⋆ பண்டமரர்க்கீந்த⋆
    படி அமரர் வாழும் பதி (26)

பதி அமைந்துநாடிப்⋆ பருத்தெழுந்த சிந்தை⋆
    மதி உரிஞ்சி வான் முகடு நோக்கி⋆ கதி மிகுத்தம்
கோல் தேடி ஓடும்⋆ கொழுந்ததே போன்றதே⋆
    மால் தேடி ஓடும் மனம் (27)

மனத்துள்ளான் வேங்கடத்தான்⋆ மா கடலான்⋆ மற்றும்
    நினைப்பரிய⋆ நீள் அரங்கத்துள்ளான்⋆ எனைப் பலரும்
தேவாதி தேவன்⋆ எனப்படுவான்⋆ முன் ஒரு நாள்
    மா வாய் பிளந்த மகன் (28)

மகனாகக் கொண்டெடுத்தாள்⋆ மாண்பாய கொங்கை⋆
    அகன் ஆர உண்பன் என்றுண்டு⋆ மகனைத் தாய்
தேறாத வண்ணம்⋆ திருத்தினாய்⋆ தென் இலங்கை
    நீறாக எய்தழித்தாய் நீ (29)

நீ அன்றுலகளந்தாய்⋆ நீண்ட திருமாலே⋆
    நீ அன்றுலகிடந்தாய் என்பரால்⋆ நீ அன்று
கார் ஓதம் முன் கடைந்து⋆ பின் அடைத்தாய் மா கடலை⋆
    பேர் ஓத மேனிப் பிரான் (30)

பிரான் என்று நாளும்⋆ பெரும் புலரி என்றும்⋆
    குரா நல் செழும் போது கொண்டு⋆ வராகத்-
தணி உருவன்⋆ பாதம் பணியும் அவர் கண்டீர்⋆
    மணி உருவம் காண்பார் மகிழ்ந்து (31)

மகிழ்ந்தது சிந்தை⋆ திருமாலே⋆ மற்றும்
    மகிழ்ந்ததுன் பாதமே போற்றி⋆ மகிழ்ந்தது
அழல் ஆழி சங்கம்⋆ அவை பாடி ஆடும்⋆
    தொழில் ஆகம் சூழ்ந்து துணிந்து (32)

துணிந்தது சிந்தை⋆ துழாய் அலங்கல்⋆ அங்கம்
    அணிந்தவன்⋆ பேர் உள்ளத்துப் பல்கால்⋆ பணிந்ததுவும்
வேய் பிறங்கு சாரல்⋆ விறல் வேங்கடவனையே⋆
    வாய் திறங்கள் சொல்லும் வகை (33)

வகையால் அவனி⋆ இரந்தளந்தாய் பாதம்⋆
புகையால் நறு மலாரால் முன்னே⋆ மிக வாய்ந்த
அன்பாக்கி ஏத்தி⋆ அடிமைப் பட்டேன் உனக்கு⋆
என் பாக்கியத்தால் இனி (34)

இனிதென்பர் காமம்⋆ அதனிலும் ஆற்ற⋆
இனிதென்பர் தண்ணீரும் எந்தாய்⋆ இனிதென்று
காமநீர் வேளாது⋆ நின் பெருமை வேட்பரேல்⋆
சேம நீர் ஆகும் சிறிது (35)

சிறியார் பெருமை⋆ சிறிதின் கண் எய்தும்⋆
அறியாரும் தாம் அறியார் ஆவர்⋆ அறியாமை
மண் கொண்டு மண் உண்டு⋆ மண் உமிழ்ந்த மாயன் என்று⋆
எண் கொண்டேன் நெஞ்சே! இரு (36)

இருந் தண் கமலத்து⋆ இரு மலரின் உள்ளே⋆
திருந்து திசை முகனைத் தந்தாய்⋆ பொருந்திய நின்
பாதங்கள் ஏத்திப்⋆ பணியாவேல்⋆ பல் பிறப்பும்
ஏதங்கள் எல்லாம் எமக்கு (37)

எமக்கென்றிரு நிதியம்⋆ ஏமாந்திராதே⋆
தமக்கென்றும் சார்வம் அறிந்து⋆ நமக்கென்றும்
மாதவனே என்னும்⋆ மனம் படைத்து⋆ மற்றவன் பேர்
ஓதுவதே⋆ நாவினால் ஓத்து (38)

ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே⋆ உத்தமன் பேர்
ஏத்தும்⋆ திறம் அறிமின் ஏழைகாள்⋆ ஓத்ததனை
வல்லீரேல்⋆ நன்றதனை மாட்டீரேல்⋆ மாதவன் பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு (39)

சுருக்காக வாங்கிச்⋆ சுலாவி நின்று⋆ ஐயார்
நெருக்கா முன் நீர் நினைமின் கண்டீர்⋆ திருப் பொலிந்த
ஆகத்தான்⋆ பாதம் அறிந்தும் அறியாத⋆
போகத்தால் இல்லை பொருள் (40)

பொருளால் அமர் உலகம்⋆ புக்கியலல் ஆகாது⋆
அருளால் அறம் அருளும் அன்றே⋆ அருளாலே
மா மறையோர்க்கீந்த⋆ மணிவண்ணன் பாதமே⋆
நீ மறவேல் நெஞ்சே! நினை (41)

நினைப்பன் திருமாலை⋆ நீண்ட தோள் காண⋆
நினைப்பார் பிறப்பொன்றும் நேரார்⋆ மனைப்பால்
பிறந்தார் பிறந்தெய்தும்⋆ பேரின்பம் எல்லாம்⋆
துறந்தார் தொழுதாரத் தோள் (42)

தோள் இரண்டெட்டேழும்⋆ மூன்று முடி அனைத்தும்⋆
தாள் இரண்டும் வீழச் சரம் துரந்தான்⋆ தாள் இரண்டும்
ஆர் தொழுவார் பாதம்⋆ அவை தொழுவதன்றே⋆ என்
சீர் கெழு தோள்⋆ செய்யும் சிறப்பு (43)

சிறந்தார்க்கெழு துணையாம்⋆ செங்கண் மால் நாமம்⋆
மறந்தாரை மானிடமா வையேன்⋆ அறம் தாங்கும்
மாதவனே என்னும்⋆ மனம் படைத்து⋆ மற்றவன் பேர்
ஓதுவதே⋆ நாவினால் உள்ளு (44)

உளதென்றிறுமாவார்⋆ உண்டில்லை என்று⋆
தளர்தல் அதன் அருகும் சாரார்⋆ அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான்⋆ விண்ணோர் முடி தோயும்⋆
பாதத்தான் பாதம் பயின்று (45)

பயின்றதரங்கம் திருக்கோட்டி⋆ பல் நாள்
பயின்றதுவும்⋆ வேங்கடமே பல் நாள்⋆ பயின்ற-
தணி திகழும் சோலை⋆ அணி நீர் மலையே⋆
மணி திகழும் வண் தடக்கை மால் (46)

மாலை அரி உருவன்⋆ பாதமலர் அணிந்து⋆
காலை தொழுதெழுமின் கைகோலி⋆ ஞாலம்
அளந்திடந்துண்டுமிழ்ந்த⋆ அண்ணலை மற்றல்லால்⋆
உளம் கிடந்த ஆற்றால் உணர்ந்து (47)

உணர்ந்தாய் மறை நான்கும்⋆ ஓதினாய் நீதி⋆
    மணந்தாய் மலர்மகள் தோள் மாலே!⋆ மணந்தாய் போய்
வேய் இரும் சாரல்⋆ வியல் இரு ஞாலம் சூழ்⋆
    மா இரும் சோலை மலை (48)

மலை ஏழும்⋆ மா நிலங்கள் ஏழும் அதிர⋆
    குலை சூழ் குரை கடல்கள் ஏழும்⋆ முலை சூழ்ந்த
நஞ்சுரத்துப் பெண்ணை⋆ நவின்றுண்ட நாவன் என்று⋆
    அஞ்சாதென் நெஞ்சே! அழை (49)

அழைப்பன் திருமாலை⋆ ஆங்கவர்கள் சொன்ன⋆
    பிழைப்பில் பெரும் பெயரே பேசி⋆ இழைப்பரிய
ஆயவனே! யாதவனே!⋆ என்றவனை யார் முகப்பும்⋆
    மாயவனே என்று மதித்து (50)

மதிக் கண்டாய் நெஞ்சே!⋆ மணிவண்ணன் பாதம்⋆
    மதிக் கண்டாய் மற்றவன் பேர் தன்னை⋆ மதிக் கண்டாய்
பேர் ஆழி நின்று⋆ பெயர்ந்து கடல் கடைந்த⋆
    நீர் ஆழி வண்ணன் நிறம் (51)

நிறம் கரியன் செய்ய⋆ நெடு மலராள் மார்வன்⋆
    அறம் பெரியன் ஆர் அதறிவார்⋆ மறம் புரிந்த
வாள் அரக்கன் போல்வானை⋆ வானவர் கோன் தானத்து⋆
    நீள் இருக்கைக்குய்த்தான் நெறி (52)

நெறியார் குழல் கற்றை⋆ முன் நின்று பின் தாழ்ந்து⋆
    அறியாதிளங்கிரி என்றெண்ணி⋆ பிறியாது
பூங்கொடிகள் வைகும்⋆ பொரு புனல் குன்றென்றும்⋆
    வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு (53)

வெற்பென்றிரும் சோலை⋆ வேங்கடம் என்றிவ் இரண்டும்⋆
    நிற்பென்று நீ மதிக்கும் நீர்மை போல்⋆ நிற்பென்று
உளம் கோயில்⋆ உள்ளம் வைத்துள்ளினேன்⋆ வெள்ளத்-
    திளங்கோயில் கைவிடேல் என்று (54)

என்றும் மறந்தறியேன்⋆ ஏழ் பிறப்பும் எப்பொழுதும்⋆
நின்று நினைப்பொழியா நீர்மையால்⋆ வென்றி
அடல் ஆழி கொண்ட⋆ அறிவனே⋆ இன்பக்
கடல் ஆழி நீ அருளிக் காண் (55)

காணக் கழி காதல்⋆ கை மிக்குக் காட்டினால்⋆
நாணப் படும் என்றால் நாணுமே⋆ பேணிக்
கரு மாலைப்⋆ பொன் மேனி காட்டாமுன் காட்டும்⋆
திருமாலை நங்கள் திரு (56)

திருமங்கை நின்றருளும்⋆ தெய்வம் நா வாழ்த்தும்⋆
கருமம் கடைப்பிடிமின் கண்டீர்⋆ உரிமையால்
ஏத்தினோம் பாதம்⋆ இருந் தடக்கை எந்தை பேர்⋆
நால் திசையும் கேட்டீரே நாம் (57)

நாம் பெற்ற நன்மையும்⋆ நா மங்கை நல் நெஞ்சத்து⋆
ஓம்பிருந்தெம்மை ஓதுவித்து⋆ வேம்பின்
பொருள் நீர்மை ஆயினும்⋆ பொன் ஆழி பாடென்று⋆
அருள் நீர்மை தந்த அருள் (58)

அருள் புரிந்த சிந்தை⋆ அடியார் மேல் வைத்து⋆
பொருள் தெரிந்து காண் குற்ற அப்போது⋆ இருள் திரிந்து
நோக்கினேன் நோக்கி⋆ நினைந்தேன் அதொண்கமலம்⋆
ஒக்கினேன் என்னையும் அங்கோர்ந்து (59)

ஓர் உருவன் அல்லை⋆ ஒளி உருவம் நின் உருவம்⋆
ஈர் உருவன் என்பர் இரு நிலத்தோர்⋆ ஓர் உருவம்
ஆதியாம் வண்ணம்⋆ அறிந்தார் அவர் கண்டீர்⋆
நீதியால் மண் காப்பார் நின்று (60)

நின்றதோர் பாதம்⋆ நிலம் புதைப்ப நீண்ட தோள்⋆
சென்றளந்ததென்பர் திசை எல்லாம்⋆ அன்று
கருமாணியாய் இரந்த⋆ கள்வனே⋆ உன்னைப்
பிரமாணித்தார்⋆ பெற்ற பேறு (61)

பேறொன்று முன் அறியேன்⋆ பெற்றறியேன் பேதைமையால்⋆
மாறென்று சொல்லி வணங்கினேன்⋆ ஏறின்
பெருத்தெருத்தம் கோடொசியப்⋆ பெண் நசையின் பின் போய்⋆
எருத்திருந்த நல் ஆயர் ஏறு (62)

ஏறேழும்⋆ வென்றடர்த்த எந்தை⋆ எரி உருவத்து
ஏறேறிப் பட்ட இடுசாபம்⋆ பாறேறி
உண்டதலை வாய் நிறையக்⋆ கோட்டம் கை ஒண் குருதி⋆
கண்ட பொருள் சொல்லின் கதை (63)

கதையும் பெரும் பொருளும் கண்ணா!⋆ நின் பேரே
இதயம்⋆ இருந்தவையே ஏத்தில்⋆ கதையும்
திருமொழியாய் நின்ற⋆ திருமாலே⋆ உன்னைப்
பரு மொழியால் காணப் பணி (64)

பணிந்தேன் திருமேனி⋆ பைங்கமலம் கையால்⋆
அணிந்தேன் உன் சேவடிமேல் அன்பாய்⋆ துணிந்தேன்⋆
புரிந்தேத்தி⋆ உன்னைப் புகலிடம் பார்த்து⋆ ஆங்கே
இருந்தேத்தி⋆ வாழும் இது (65)

இது கண்டாய் நல் நெஞ்சே!⋆ இப் பிறவி ஆவது⋆
இது கண்டாய் எல்லாம் நாம் உற்றது⋆ இது கண்டாய்
நாரணன் பேர் ஓதி⋆ நரகத்தருகணையா⋆
காரணமும் வல்லையேல் காண் (66)

கண்டேன் திருமேனி⋆ யான் கனவில்⋆ ஆங்கவன் கைக்
கண்டேன்⋆ கனலும் சுடர் ஆழி கண்டேன்⋆
உறு நோய் வினை இரண்டும்⋆ ஓட்டு வித்து⋆ பின்னும்
மறு நோய் செறுவான் வலி (67)

வலி மிக்க வாள் எயிற்று⋆ வாள் அவுணர் மாள⋆
வலி மிக்க வாள் வரை மத்தாக⋆ வலி மிக்க
வாள் நாகம் சுற்றி⋆ மறுகக் கடல் கடைந்தான்⋆
கோள் நாகம் கொம்பொசித்த கோ (68)

கோ ஆகி மா நிலம் காத்து⋆ நம் கண் முகப்பே⋆
மா ஏகிச் செல்கின்ற மன்னவரும்⋆ பூ வேகும்
செங்கமல நாபியான்⋆ சேவடிக்கே ஏழ் பிறப்பும்⋆
தண் கமல மேய்ந்தார் தமர் (69)

தமர் உள்ளம் தஞ்சை⋆ தலை அரங்கம் தண் கால்⋆
தமர் உள்ளும் தண் பொருப்பு வேலை⋆ தமர் உள்ளும்
மாமல்லை கோவல்⋆ மதிள் குடந்தை என்பரே⋆
ஏவல்ல எந்தைக் கிடம் (70)

இடங்கை வலம்புரி நின்றார்ப்ப⋆ எரி கான்று
அடங்கார்⋆ ஒடுங்குவித்ததாழி⋆ விடம் காலும்
தீ வாய் அரவணைமேல்⋆ தோன்றல் திசை அளப்பான்⋆
பூவார் அடி நிமிர்த்த போது (71)

போதறிந்து வானரங்கள்⋆ பூஞ்சுனை புக்கு⋆ ஆங்கலர்ந்த
போதரிந்து⋆ கொண்டேத்தும் போது⋆ உள்ளம் போது
மணி வேங்கடவன்⋆ மலர் அடிக்கே செல்ல⋆
அணி வேங்கடவன் பேர் ஆய்ந்து (72)

ஆய்ந்துரைப்பன் ஆயிரம் பேர்⋆ ஆய் நடுவந்திவாய்⋆
வாய்ந்த மலர் தூவி வைகலும்⋆ ஏய்ந்த
பிறைக் கோட்டுச் செங்கண்⋆ கரி விடுத்த பெம்மான்⋆
இறைக்காட்படத் துணிந்த யான் (73)

யானே தவம் செய்தேன்⋆ ஏழ் பிறப்பும் எப்பொழுதும்⋆
யானே தவம் உடையேன் எம் பெருமான்⋆ யானே
இருந்தமிழ் நல் மாலை⋆ இணை அடிக்கே சொன்னேன்⋆
பெருந்தமிழன் நல்லேன் பெரிது (74)

பெருகு மத வேழம்⋆ மாப் பிடிக்கு முன் நின்று⋆
இரு கண் இள மூங்கில் வாங்கி⋆ அருகிருந்த
தேன் கலந்து நீட்டும்⋆ திரு வேங்கடம் கண்டீர்⋆
வான் கலந்த வண்ணன் வரை (75)

வரைச் சந்தனக் குழம்பும்⋆ வான் கலனும் பட்டும்⋆
விரைப் பொலிந்த வெண் மல்லிகையும் நிரைத்துக் கொண்டு⋆
ஆதிக்கண் நின்ற⋆ அறிவன் அடி இணையே⋆
ஓதிப் பணிவதுறும் (76)

உறும் கண்டாய் நல் நெஞ்சே!⋆ உத்தமன் நற் பாதம்⋆
உறும் கண்டாய் ஒண் கமலந் தன்னால்⋆ உறும் கண்டாய்
ஏத்திப் பணிந்தவன் பேர்⋆ ஈர் ஐஞ்ஞூறெப்பொழுதும்⋆
சாற்றி உரைத்தல் தவம் (77)

தவம் செய்து⋆ நான் முகனே பெற்றான்⋆ தரணி
நிவந்தளப்ப நீட்டிய பொற் பாதம்⋆ சிவந்த தன்
கை அனைத்தும்⋆ ஆரக் கழுவினான்⋆ கங்கை நீர்
பெய்தனைத்துப் பேர் மொழிந்து பின் (78)

பின் நின்று தாய் இரப்பக் கேளான்⋆ பெரும் பணைத் தோள்
முன் நின்று தான் இரப்பாள்⋆ மொய்ம் மலராள்⋆ சொல் நின்ற
தோள் நலந்தான்⋆ நேர் இல்லாத் தோன்றல்⋆ அவன் அளந்த
நீள் நிலம் தான்⋆ அத்தனைக்கும் நேர் (79)

நேர்ந்தேன் அடிமை⋆ நினைந்தேன் அதொண்கமலம்⋆
ஆர்ந்தேன் உன் சேவடிமேல் அன்பாய்⋆ ஆர்ந்த
அடிக் கோலம்⋆ கண்டவர்க்கென் கொலோ⋆ முன்னைப்
படிக் கோலம் கண்ட பகல் (80)

பகல் கண்டேன்⋆ நாரணனைக் கண்டேன்⋆ கனவில்
மிகக் கண்டேன்⋆ மீண்டவனை மெய்யே மிகக் கண்டேன்⋆
ஊன் திகழும் நேமி⋆ ஒளி திகழும் சேவடியான்⋆
வான் திகழும் சோதி வடிவு (81)

வடிக் கோல வாள் நெடுங்கண்⋆ மா மலராள்⋆ செவ்விப்
படிக் கோலம்⋆ கண்டகலாள் பல் நாள்⋆ அடிக்கோலி
ஞாலத்தாள் பின்னும்⋆ நலம் புரிந்ததென் கொலோ⋆
கோலத்தால் இல்லை குறை (82)

குறையாக வெம் சொற்கள்⋆ கூறினேன் கூறி⋆
மறை ஆங்கென உரைத்த மாலை⋆ இறையேனும்
ஈயும்கொல் என்றே⋆ இருந்தேன் எனைப் பகலும்⋆
மாயன் கண் சென்ற வரம் (83)

வரம் கருதித் தன்னை⋆ வணங்காத வன்மை⋆
உரம் கருதி மூர்க்கத்தவனை⋆ நரம் கலந்த
சிங்கமாய்க் கீண்ட⋆ திருவன் அடி இணையே⋆
அங்கண் மா ஞாலத்தமுது (84)

அமுதென்றும் தேன் என்றும்⋆ ஆழியான் என்றும்⋆
அமுதன்று கொண்டுகந்தான் என்றும்⋆ அமுதன்ன
சொல் மாலை ஏத்தித்⋆ தொழுதேன் சொலப்பட்ட⋆
நன்மாலை ஏத்தி நவின்று (85)

நவின்றுரைத்த நாவலர்கள்⋆ நாள் மலர் கொண்டு⋆ ஆங்கே
பயின்றதனால்⋆ பெற்ற பயன் என்கொல்⋆ பயின்றார் தம்
மெய்த் தவத்தால்⋆ காண்பரிய மேக மணி வண்ணனை⋆ யான்
எத்தவத்தால் காண்பன்கொல் இன்று (86)

இன்றா அறிகின்றேன் அல்லேன்⋆ இரு நிலத்தைச்
சென்றாங்களந்த திருவடியை⋆ அன்று
கருக்கோட்டியுள் கிடந்து⋆ கை தொழுதேன் கண்டேன்⋆
திருக்கோட்டி எந்தை திறம் (87)

திறம்பிற்றினி அறிந்தேன்⋆ தென் அரங்கத்தெந்தை⋆
திறம்பா வழிச் சென்றார்க்கல்லால்⋆ திறம்பாச்
செடிநரகை நீக்கித்⋆ தாம் செல்வதன் முன்⋆ வானோர்
கடிநகர வாசல் கதவு (88)

கதவிக் கதம் சிறந்த⋆ கஞ்சனை முன் காய்ந்து⋆
அதவிப் போர் யானை ஒசித்து⋆ பதவியாய்ப்
பாணியால் நீர் ஏற்றுப்⋆ பண்டொருகால் மாவலியை⋆
மாணியாய்க் கொண்டிலையே மண் (89)

மண்ணுலகம் ஆளேனே⋆ வானவர்க்கும் வானவனாய்⋆
விண்ணுலகம் தன் அகத்து மேவேனே⋆ நண்ணித்
திருமாலை⋆ செங்கண் நெடியானை⋆ எங்கள்
பெருமானைக் கை தொழுத பின் (90)

பின்னால் அரு நரகம்⋆ சேராமல் பேதுறுவீர்⋆
முன்னால் வணங்க முயல்மினோ⋆ பல் நூல்
அளந்தானைக்⋆ கார்க் கடல் சூழ் ஞாலத்தை⋆ எல்லாம்
அளந்தான் அவன் சேவடி (91)

அடியால் முன் கஞ்சனைச் செற்று⋆ அமரர் ஏத்தும்
படியான்⋆ கொடிமேல் புள் கொண்டான்⋆ நெடியான் தன்
நாமமே⋆ ஏத்துமின்கள் ஏத்தினால்⋆ தாம் வேண்டும்
காமமே⋆ காட்டும் கடிது (92)

கடிது கொடு நரகம்⋆ பிற்காலும் செய்கை⋆
கொடிதென்றது கூடா முன்னம்⋆ வடி சங்கம்
கொண்டானைக்⋆ கூந்தல் வாய் கீண்டானை⋆ கொங்கை நஞ்-
சுண்டானை⋆ ஏத்துமினோ உற்று (93)

உற்று வணங்கித்⋆ தொழுமின் உலகேழும்⋆
முற்றும் விழுங்கும் முகில் வண்ணம்⋆ பற்றிப்
பொருந்தாதான் மார்பிடந்து⋆ பூம் பாடகத்துள்
இருந்தானை⋆ ஏத்தும் என் நெஞ்சு (94)

என் நெஞ்சம் மேயான்⋆ என் சென்னியான்⋆ தான் அவனை
வல் நெஞ்சம்⋆ கீண்ட மணி வண்ணன்⋆ முன்னம் சேய்
ஊழியான்⋆ ஊழி பெயர்த்தான்⋆ உலகேத்தும்
ஆழியான்⋆ அத்தியூரான் (95)

‡அத்தியூரான்⋆ புள்ளை ஊர்வான்⋆ அணி மணியின்
துத்தி சேர்⋆ நாகத்தின் மேல் துயில்வான்⋆ மூத்தீ
மறை ஆவான்⋆ மா கடல் நஞ்சுண்டான் தனக்கும்⋆
இறை ஆவான் எங்கள் பிரான் (96)

எங்கள் பெருமான்⋆ இமையோர் தலைமகன்! நீ⋆
செங்கண் நெடுமால் திருமார்பா⋆ பொங்கு
பட மூக்கின் ஆயிர வாய்ப்⋆ பாம்பணை மேல் சேர்ந்தாய்⋆
குடமூக்கில் கோயிலாக் கொண்டு (97)

கொண்டு வளர்க்கக்⋆ குழவியாய்த் தான் வளர்ந்தது⋆
உண்டதுலகேழும் உள்ளொடுங்க⋆ கொண்டு
குடம் ஆடிக்⋆ கோவலனாய் மேவி⋆ என் நெஞ்சம்
இடமாகக் கொண்ட இறை (98)

‡இறை எம் பெருமான் அருள் என்று⋆ இமையோர்
முறை நின்று⋆ மொய்ம் மலர்கள் தூவ⋆ அறை கழல
சேவடியான்⋆ செங்கண் நெடியான்⋆ குறள் உருவாய்
மாவடிவில்⋆ மண் கொண்டான் மால் (99)

‡மாலே!⋆ நெடியானே!⋆ கண்ணனே⋆ விண்ணவர்க்கு
மேலா!⋆ வியன் துழாய்க் கண்ணியனே⋆ மேலால்
விளவின் காய்⋆ கன்றினால் வீழ்த்தவனே⋆ என்றன்
அளவன்றால்⋆ யானுடைய அன்பு (100)

॥ பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம் ॥